மாலை முரசு

பக்கங்கள் 16 + 6

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 04 வெள்ளிக்கிழமை 20.09.2024 | அதிர்வு 50

## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!

**தெஹிவளையில் பயங்கரம்**

தெஹிவளை – கடவத்தை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்**

# அமெரிக்கா பறந்த பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக இன்று வெள்ளிக் கிழமை அதிகாலை அமெரிக்காவுக்குப் பயணமாகியுள்ளார்.

இந்தத் தகவலை விமான நிலையத் துக்குப் பொறுப்பான அதிகாரி ஊடகங்க ளிடம் உறுதிப்படுத்தியுள்ளார். 05

**இலங்கையின் வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுடன்**

# கடன் மறுசீரமைப்புக்கு கொள்கை ரீதியில் இணக்கம்



2023 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட இலங்கையின் 17.5 டொலர் பில்லியன் தனியார் வணிகக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு நேற்று எட்டப்பட்டது. சர்வதேச முதலீட்டாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (Ad Hoc Group of Bondholders - AHGB) மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் (Local Consortium of Sri Lanka - LCSL) கூட்டு நிறுவனம் ஆகியவற றுக்கு இடையிலான கலந்து 05

# வாக்களிப்பு நிலையங்களுக்குத் தேவையான வாக்குப் பெட்டிகள் அனுப்பும் பணி ஆரம்பம்

## யாழ்ப்பாணத்தில்....!











(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபயை தெரிவு செய்வதற்காக நாளைய தினம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பணி இன்று காலை 8 மணியிலிருந்து ஆரம்பமானது.

யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல லப்பட்டன.

இத் தேர்தல் கடமைகளுக்காக 8ஆயிரத்து 232 உத்தியோகத்தர்கள் மற்றும் 2ஆயிரத்து 100 பொலிசாரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 42 பஸ்களும் தனியார் போக்குவரத்து சங்கம் மூலம் 132 பஸ்களும் தேர்தல் கடமைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளில் வாக்குப் பெட்டிகளை எடுத்து செல்ல விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளன.

இதேவேளை, சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் இன்றையதினம் ஈடுபட்டனர். அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினரும், பொலிசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில்...!









(கே.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் அனைத்தும் இன்று காலை 7 மணிமுதல் எடுத்துசெல்லப்பட்டன.

வவுனியா மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டுவரும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இருந்து வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வாக்களிப்பு நிலையங்க ளிற்கு பொலிசாரின் பாதுகாப்புடன் பஸகளில் எடுத்துச் செல்லப்பட்டது.

வவுனியாவில் 1,28,585 பேர் வாக்களிக்கத் தொகுதி பெற்றுள்ளனர். தேர்தல் கடமைகளுக்காக பொலிசார் உட்பட 2,500 ற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில்...!





**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனைத்தும் இன்று காலை 9 மணி முதல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் வாக்கெண்ணும் மத்திய நிலையமாக செயற்பட்டு வரும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து இந்த வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்களிப்பு நிலையங்களுக்கு பொலிஸாரின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில்...!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

பலத்த பாதுகாப்புடன் ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

## திருமலையில்...!



**(ஹஸ்பர்)**

திருகோணமலை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இன்று (20) அனுப்பி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் வாக்குப் பெட்டிகளானது திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் வைத்து அனுப்பி வைக்கப்பட்டன.

மொத்தமாக 318 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன. மொத்தமாக திருகோணமலை மாவட்டத்தில் 315,925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

## அம்பாறையில்...!



**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பணிகள் இன்று காலை இடம்பெற்றன.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் 555,432 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்படுகின்றன.

அதன்படி அம்பாறை 188222 பேர், சம்மாந்துறை 99727 பேர், கல்முனை 82830 பேர், பொத்துவில் தொகுதியில் 184653 பேர் வாக்களிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர்.

அம்பாறை மாவட்டத்தில் 184 அம்பாறை வாக்களிப்பு நிலையங்கள் 93 சம்மாந்துறை வாக்களிப்பு நிலையங்கள் 74 கல்முனை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 177 பொத்துவில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அசம்பாவிதங் களைத் தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடி படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

வாக்களிப்பு நிலையத்தில் நாளை காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க இடமளிக்க முடியாது அவர் மேலும் தெரிவித்தார்.

## நுவரெலியாவில்...!



**(க.கிஷாந்தன்)**

நுவரெலியா காமினி சிங்கள வித்தியாலயத்தில் இருந்து வாக்குச்சாவடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்களில் 6 லட்சத்து 5 ஆயிரத்து 292 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, மஸ்கெலியா, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதில் மஸ்கெலியா தொகுதியில் 347,646 வாக்காளர்களும், கொத்மலை தொகுதியில் 88219 வாக்காளர்களும், ஹங்குராங்கெத்த தொகுதியில் 78,437 வாக்காளர்களும் மற்றும் வலப்பனை தொகுதியில் 90,990 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர். மேலும், தபால் மூலம் வாக்களிக்க தகுதியான வாக்காளர்களின் எண்ணிக்கை 19,748 ஆகும்.

52 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியாவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 41 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியா காமினி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மிகுதி 11 வாக்கு எண்ணும் நிலையங்கள் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் 8500 பேர் கடமையில் ஈடுப்பட்டுள்ளனர். பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் என 1,748 பேர் கடமையில் ஈடுப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு 36 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பாரதூரமான முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை என்று நுவரெலியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்தார்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர்
## வல்லிபுரம் சிவஞானம்

(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்,
வலிகாமம் கிழக்கு - கோப்பாய்)

**மண்ணில்** 28.05.1950



**விண்ணில்** 19.09.2024

'முரசு' இணைய நாளிதழின் உதவி ஆசிரியர் சிவஞானம் **ஜெயானந்தனின்** தந்தை வல்லிபுரம் சிவஞானம் நேற்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- 'முரசு' குழுமம்.**

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அமெரிக்கா...

அதிகாலை 03.05 மணியளவில் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸின் ஈ.கே. - 649 விமானத்தில் பஸில் ராஜபக்ஷ டுபாய்க்குச் சென்றுள்ளார்.

அவர் அங்கிருந்து அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை, தேர்தல் காலங்களில் வெளிநாடு செல்வது பஸில் ராஜபக்ஷ வின் வழமையான செயற்பாடு என அவரின் நெருங்கிய நண்பர் ஒருவர் தென்னிலங்கை ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### குடும்பஸ்தர் ...

தலைக்கவசத்தால் முகத்தை மறைத்து பிரவேசித்த 2 பேர் இன்று காலை இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த 45 வயதான நபர், களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### கடன்...

ரையாடலின் பின்னர், தனியார் பிணைமுறி வழங்குநர்களுடனான இணக்கப்பாட்டு எட்டப்பட்டுள்ளது. இந்நாட்டின் தனியார் பிணைமுறிகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவற்றை இந்தக் குழுக்கள் கொண்டுள்ளன.

இந்த இணக்கப்பாடுகளுக்கமைய பிணைமுறிதாரர்கள் 11 சதவீத தள்ளுபடி விகிதத்தின் அடிப்படையில் தற்போதைய கடன் பெறுமதியில் 40.3 சதவீத தள்ளுபடியை வழங்க இணங்கியுள்ளனர்.

இந்த இணக்கப்பாடுகளுக்கு அமைய, 2024 ஜூலை மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயற்பாட்டு வரைவை விடவும் பெருமளவான கடன் சலுகை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதோடு,புதிய நிபந்தனைகள் அடிப்படையில் வட்டிக் கொடுப்பனவிலும் குறைப்புச் செய்யப்படும்.

இலங்கை 3.3 பில்லியன் டொலர் தனியார் கடனை மறுசீரமைப்பு செய்வதற்கான நிதி நிபந்தனைகள் தொடர்பில் சீன அபிவிருத்தி வங்கியுடன் (CDB) கொள்கை ரீதியான இணக்கப்பாட்டை எட்டியுள்ளது.

சீன எக்ஸிம் வங்கி, ஸ்ரீ லங்கா உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு (OCC), சீன அபிவிருத்தி வங்கி (CDB) மற்றும் பிணைமுறிதாரர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பலனாக, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்ட காலப்பகுதிக்குள் இலங்கை 17 டொலர் பில்லியனுக்கும் அதிகமான கடன் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதில் சீன எக்ஸிம் வங்கியின் 2.4 டொலர் பில்லியன்களும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் 2.9 டொலர் பில்லியன்களும், சீன அபிவிருத்தி வங்கியின் (CDB) 2.5 டொலர் பில்லியன்களும், பிணைமுறிதாரர்களின் 9.5 டொலர் பில்லியன்களும் அடங்கும்.

இந்தச் செயன்முறை முழுவதிலும் இலங்கையின் கடன் வழங்குநர்களும் சர்வதேச நாணய நிதியமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் செயலகமும் வழங்கிய தொடர்ச்சியான ஒத்திழைப்பிற்கு இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நன்றி தெரிவித்தார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புடன் செயற்படுக!

நாளை விடிந்தால் நாட்டில் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்பு. காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை மக்கள் தமது வாக்குரிமையைத் தத்தமது வாக்களிப்பு நிலையங்களில் பிரயோகிக்க முடியும்.

வாக்களிப்பு முடிந்ததும் மாலை 4:15 மணிக்கு தபால் மூல வாக்குகள் என்னும் பணி ஆரம்பித்து விடும். ஏனைய வாக்குகளை எண்ணும் பணி, உரிய வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு எடுத்து வரப்பட்டமையை அடுத்து நாளை மாலை 7 மணி அளவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்ட ரீதியாக வாக்களிப்பின் போக்கு எப்படி இருக்கும் என்பது நாளை பின்னிரவுக்குப் பின்னர் - அடுத்த நாள் விடிகாலையில் - ஓரளவு தெளிவாகி விடும் என எதிர்வு கூறப்படுகின்றது.

முன்னைய தேர்தல்ளோடு ஒப்பிடும் போது இந்தத் தேர்தலில் வெற்றிக்குக் கடும் போட்டி. அதுவும் மும்முனைப் போட்டி.

ஆயினும், வழமைக்கு மாறாக இம்முறை தேர்தல் வன்முறைகள் மிக மிகக் குறைவு. ஆனாலும் வாக்களிப்பின் பின்னரும் இந்த நிலைமை நீடிக்குமா என்பதுதான் பல தரப்பினரும் எழுப்பும் கேள்வியும் சந்தேகமுமாகும்.

போட்டி கடுமை என்பதாலும், அது மும்முனைப் போட்டி என்பதாலும், எந்த வேட்பாளரும் அளிக்கப்பட்டு செல்லுபடியாகும் மொத்த வாக்குகளில் 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெறும் வாய்ப்பு அடியோடு இல்லை என்றே கூறப்படுகின்றது.

அதனால் இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பு நிச்சயம் நடக்கும். ஆனால் அங்குதான் சிக்கல் புதைந்து கிடப்பதாகத் தேர்தல் விவகாரங்களோடு பரிச்சயமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை பூர்த்தி அடைவதற்குள் இழுபடும் கால தாமதத்திற்கு இடையில் நாட்டில் வன்முறை வெடிக்க வாய்ப்பு இருப்பதாக முற்கூட்டியே எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

முதலாம் சுற்றில் முன்னணிக்கு வருபவர், இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பை அடுத்து பின்னடைவுக்குப் போகக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்று குறிப்பிடும் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய, அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

அத்தகைய நிலைமை ஒன்று நேர்ந்தால் நாட்டில் குழப்பமும் வன்முறைகளும் ஸ்திரமற்ற நிலையும் ஏற்படும் ஆபத்து உண்டு என்றும் அவர் எச்சரிக்கின்றார்.

அப்படி இரண்டாம் சுற்றும் வாக்கு எண்ணப்படும் நிலைமை நேர்ந்து, அதனால் உருவாகக்கூடிய காலதாமதத்துக்கு மத்தியில் ஏற்படும் கலவரங்கள், வன்முறைகள் போன்றவற்றை அடக்கத் தக்க ஆயத்தங்களுடன் பொலிஸாரும் ஆயுதப் படையினரும் உள்ளனர் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும் அது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

தேர்தல் திணைக்களமும், தேர்தல் ஆணையமும், தேர்தல் விடயங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் சட்ட விதிமுறைகளின் பிரகாரமும் செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

இப்போது தேர்தலுக்கு முன்னர் வெற்றி தமது என்று சூளுரைக்கும் வேட்பாளர் தரப்புகள், மக்களின் முடிவு வேறாக வந்தால் அதனை மதித்து, ஏற்று, கட்டுப்படத் தயாராகத் தம்மை மாற்றிக் கொள்வது அவசியம்.

அதேசமயம் இந்தத் தேர்தலை நேர்மை, நீதியாக - விதிமுறைகளுக்கு அமைய - குளறுபடிகள், அச்சுறுத்தல்களுக்கு இடமளிக்காமல் - நடத்தி முடிப்பதில் அதிகாரிகளும் உறுதியாக இருக்க வேண்டும்.

அமைதியான, நீதி, நியாயமான தேர்தல் ஒன்றை நடத்தி முடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டும். அப்படி ஒத்துழைத்தால்தான் நியாயமான தேர்தலுக்கு இடம் உண்டு.



# தனியார் பிணைமுறி உரிமையாளர்களுடனான பேச்சு வெற்றி

## நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டதாக விரைவில் உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கும் என்கிறார் ஜனாதிபதி

தனியார் பிணைமுறி உரிமையாளர்களுடனான பேச்சுகள் நிறைவடைந்துள்ளதோடு நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிப்பது தொடர்பான அனைத்து பேச்சுகளும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும், நாடு வங்குரோத்து நியைில் இருந்து விடுபட்டது தொடர்பான உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைத்தவுடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான துரித திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெற்ற இலங்கை இளம் தொழில்முனைவோர் சபையின நிர்வாக சபையுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மிக விரைவில் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது தனது எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்குத் தேவையான மூலோபாய திட்டங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய நவீனமயமாக்கல் அதில் பிரதான பிரிவு எனவும் குறிப்பிட்டார்.

20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் வலையமைப்புடன் இணைந்த ஜி 20 அமைப்பின் இளம்தொழில்முனைவோர் கூட்டணியின் அங்கத்துவத்தை தற்போது பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக ஜனாதிபதியிடம் அறிவித்த இலங்கை இளம் தொழில்முனைவோர் சபை, தாம் முன்னெடுத்துள்ள பல்வேறு தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்களுக்கு கே.பி.எம்.ஜி. மற்றும் பி.எம்.ஐ. உள்ளிட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தது.

ஆரம்ப நிலையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுக்கு விரைவான உதவி மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அமெரிக்கா, டுபாய், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள தனது நிர்வாக சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் இலங்கையின் இளம் தொழில்முனைவோர் சபை இலங்கையின் தொழில் முயற்சியாளர்களுக்கு தமது வர்த்தகங்களை விரிவுபடுத்துவதற்கும் உள்ளூர் உற்பத்திகளை உலகளவிற்கு கொண்டு செல்வதற்குமான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

“நமது நாட்டின் இருப்பிற்காக, சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துவதிலும், ஏற்றுமதியை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்த பொருளாதார மாற்றத்தை ஆதரிப்பதற்காக நாங்கள் புதிய நிறுவனங்களை நிறுவ இருக்கின்றோம். அதுவே முன்னோக்கி செல்லும் ஒரே வழியாகும்.

தனியார் பிணைமுறி உரிமையாளர்களுடனான பேச்சுவார்த்தைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனவே, நமது வங்குரோத்து நிலையில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறுவதே அடுத்த முக்கியமான படியாகும். அதன் பிறகு, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் விரிவான திட்டத்தை தொடங்குவோம்.

ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்லும் போது, அனைத்து முறைமைகளையும் மூலோபாயங்களையும் மாற்றியமைக்க வேண்டும். அதனை நாம் அடையாளம் கண்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல், விவசாயம் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளைத் திறந்து விடுவது குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

ஒற்றைச் சாளரக் முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த செயற்பாடுகளை நெறிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலத்தில், நாங்கள் வங்குரோத்து நிலையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னுரிமை அளித்தோம். அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்த ஒரு மாதத்திற்குள் உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கும். அதன் காரணமாக, 10-15 பில்லியன் டொலர்கள் மதிப்பீட்டில் கடன் செலுத்துவதற்கு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் இன்று மாலை முறையான அறிவிப்பை வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.” - என்றார்.

ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க, சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொழும்பகே மற்றும் இலங்கை இளம் தொழில்முனைவோர் சபையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.




# வடக்கு மாகாண பத்து வைத்தியசாலைகளுக்கு ஜேர்மன் நாட்டிலிருந்து நன்கொடை கையளிப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள பத்து வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கான அதி நவீன படுக்கைகள் உள்ளிட்ட நன்கொடைகள் ஜேர்மன் நன்கொடையாளர் ஒருவரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிகழ்வு வவுனியா பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று (19) மாலை நடைபெற்றது. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் இந்த நன்கொடை பொருள்கள் கையளிக்கப்பட்டன.

ஸ்ரீ சக்தி ஆன்மீக இந்து அமைப்பின் ஊடாக சர்வதேச இந்து கலாசார ஆலோசகரான கலாநிதி இரத்னசாமி ராமேஸ்வரனால் ஜேர்மன் நாட்டிலிருந்து பெறப்பட்ட இந்த நன்கொடைகள் இலங்கையின் பல பாகங்களில் பகிர்ந்தளிக்கப்படுகிறன.





அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு அதி நவீன படுக்கைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் நன்கொ டையாகப் பெற்றுக்கொடுக்கப்பட் டுள்ளன.








# ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சம்பியனானது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுக்களுள் ஒன்றான ஆண்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆண்கள் அணி சம்பியனாகவும், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் பெண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பேரதெனிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தை 44:47 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு யாழ்ப்பாணம் பல் கலைக்கழகம் சம்பியனானது.

பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பெண்கள் அணி 48:38 என்ற புள்ளி அடிப்படையில் சப்ரகமுவ பல்கலைக்கழக பெண்கள் அணியுடன் தோல்வியுற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் வழங்கிய விளையாட்டு உபகரணம்



ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை காரைதீவு விளையாட்டு கழகத்துக்கு வழங்கியுள்ளது.

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அமைச்சின் செயலாளர் கணபதிப் பிள்ளை மகேசன் அதனை நேரில் சென்று கழகச் செயலாளர் எஸ்.கிருஷ ாந்தனிடம் வழங்கி வைத்தார் .

இதற்கு இணைப்பாளராக இருந்து செயற்பட்ட விளையாட்டு கழக ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் லோ. சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.






# ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நடும் திட்ட மாணவி கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை தீவு முழுவதும் பசுமையை ஏற்படுத்தும் நோக்கில் காலநிலை மாற்றம் தொடர்பாகவும் பிலாஸ்டிக் - பொலித்தீன் பாவனை எதிர்ப்பு தொடர்பாகவும் ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாடு முழுவதும் நடுவது தொடர்பாகவும் இற்றைக்கு மூன்று வருடங்களாக ஈடுபட்டுவரும் சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் மின்மினி மின்ஹாவுக்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்துள்ளார். மாணவி மேடைக்கு அழைக்கப்பட்டு ஒரு மில்லியன் மரக்கன்றுகளை நாடு முழுவதும் நடுவது தொடர்பான செயற் றிட்டம் குறித்து கேட்கப்பட்டதுடன், அமைச் சரால் அந்த மாணவி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் சகோதரன் உயிர்மாய்ப்பு; சகோதரியும் உயிர்மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணத்தில் சகோதரன் உயிரிழந்த சோகத்தில் சகோதரியும் உயிர்மாய்க்க முயன்ற நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த இளைஞரின் சகோதரியான இரண்டு மாத குழந்தையின் தாயாரும் உயிர் மாய்க்க முயன்ற நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

# தேர்தல் கடமைகளில் இருந்து 9 அரச அதிகாரிகள் நீக்கம்!

அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எம்.பி.சுமணசேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலே தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

9 அதிபர்கள், ஒரு பிரதி அதிபர், நான்கு ஆசிரியர்கள், பொது சுகாதார பரிசோதகர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் மூன்று வைத்தியர்கள் உட்பட 19 அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் பிணக்குகளைத் தீர்க்கும் மத்திய நிலையத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையை அடுத்து 19 அதிகாரிகளில் 9 பேர் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடமைகளில் இருந்து நீக்கப்பட்டவர்களின் வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன என்று மாவட்ட தேர்தல் அதிகாரி சுமனசேகர தெரிவித்தார்.



# கிரிக்கெட் பயிற்சி ஆடுகளம் கரப்பந்தாட்ட மைதானம் திறப்பு

(அபு அலா )

திருகோணமலை உவர்மலை விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சி ஆடுகளம் மற்றும் கரப்பந்தாட்ட மைதானம் என்பவற்றின் திறப்பு விழா நேற்று மாலை (19) இடம்பெற்றன.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அவற்றைத் திறந்து வைத்தார். இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதனா யக்கா, ஆளுநரின் பிரத்யேக செயலாளர் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.









# தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ள அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

முஸ்லிம் சமய கலாசார திணைக் களத்தால் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டி யில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி நான்கு போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலிடங்களைப் பெற்றுள்ளது.

இதனைப் பாராட்டும் நிகழ்வு அக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தினரால் மிக விமரிசையாக நடத்தப் பட்டது. நிகழ்வு அக்கரைப்பற்று ஹல லாஜ் மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் கே.சமீம் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.சம்சுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ரக்சூர ரபான், கஸீதா, அரபு எழுத்தணிக்கலை, அரபுத்தமிழ் இலக்கியம் ஆகிய போட்டி களில் இக்கல்லூரி மாணவர்கள் முதலா மிடங்களைப் பெற்றுக் கொண்ட னர்.

இந்த நிகழ்வில் பங்கு கொண்ட மாணவர்கள், அவர்களைப் பயிற்று வித்த வளவாளர்கள், உதவிகள் வழங் கிய ஆசிரியர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம்

## ஆரம்பித்து வைத்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் முதல் கட்டமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள 348 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் மின்சார கட்டணம் செலுத்த இயலாத நிலையில் பல்வேறு பாடசாலைகள் காணப்படுவதாக ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மின்சாரம் இன்றி மாணவர்கள் படும் அவலத்தை அறிந்த ஆளுநர், கிழக்கு மாகாணத்தில் உள்ள 1124 பாடசாலைகளில் சூரிய மின்சக்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அதன் முதல் கட்டமாக 342 பாடசாலைகளுக்கு ஆளுநரால் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் அனைவரும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.



# சாய்ந்தமருதில் சிரமதான நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் “சுத்தமாக இருப்போம் பசுமையோடு வாழ்வோம் “ எனும் தொனிப் பொருளின் கீழ் மாதம் ஒரு பாடசாலையின் சுற்றுப்புற சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் பணியின் முதற்கட்டம் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மாணவர்களுக்குத் தொற்று நோய்களை உருவாக்கும் அழுக்குகள், குப்பைகள் அற்ற ஒரு புதுயுகத்தை உருவாக்கும் முகமாக பாடசாலை சூழலிலுள்ள கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டு சுத்தமாக்கும் சிரமதான பணி இதன்போது மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சமூக சேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை பணிப்பாளர், அமைப்பின் ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





# வந்தாறுமூலையில் இடம்பெற்றுள்ள மட்டக்களப்பு மாவட்ட சாரணர் பாசறை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் பாசறை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல கல்வி வலயங்களையும் சேர்த்த சாரண மாணவர்கள் கலந்து கொண்ட சாரணர் பாசறை பதில் மாவட்ட ஆணையாளரும், உதவி தலைமையக ஆணையாளரும், கிழக்கு மாகாண சாரண இணைப்பாளருமான பொ. சசிகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாவட்ட சாரண தலைவர்கள் மற்றும் சாரண மாணவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.





# குளவி கொட்டியதால் மரத்திலிருந்து தவறி வீழ்ந்த தொழிலாளி உயிரிழப்பு

**(ஆ.ரமேஸ், மஸ்கெலியா)**

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மடக்கும்பரை எம்.சீ. தோட்டத்தில் இன்று (20) காலை மரத்தில் இருந்து வீழ்ந்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மரமேறி விறகு வெடிகொண்டிருந்த நிலையில் குளவி தாக்குதலுக்கு இலக்காகிய இந்த நபர் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் மடக்கும்பரை எம்.சி. தோட்டப் பிரிவைச் சேர்ந்த நடராஜா கணேஸ்வரன் (வயது 32) என்றும் ஒரு பிள்ளையின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் நீதிவானின் மரண விசாரணைக்காக சடலம் சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஷஸார் விசாரணையின் பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவுள்ளனர் என்று தெரிவித்தனர்.





# மன்னார் பெரிய பாலத்தடியில் விபத்து!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் பெரிய பாலத்தடியில் மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் இன்று (20) காலை யில் இடம்பெற்றுள்ளது .

இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கி செலுத்தி வந்த நபர் காயம டைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

# விலங்கு கொழுப்பு நெய்யில் திருப்பதி லட்டு தயாரிப்பு

## சர்ச்சையும் பின்னணியும்



திருப்பதி லட்டு பிரசாதம் உலக பிரசித்தி பெற்றதாகும். ஆனால், இந்த லட்டு பிரசாதத்தில் ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சி காலத்தில், விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய்யை பயன்படுத்தப்பட்டதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு வந்ததும், திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரியாக சியாமளராவ் நியமனம் செய்யப்பட்டார். ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர், பதவி பொறுப்பேற்றதும், திருமலையில் பல இடங்களில் ஆய்வு மேற்கொண்டு, லட்டு பிரசாதத்தின் தரத்தையும் ஆய்வு செய்தார்.

அப்போது நெய்யில் கலப்படம் இருப்பதை அறிந்த அவர், அதனை பரிசோதிக்க ஆயுவு கூடத்துக்கு அனுப்பி வைத்தார். அப்போது நெய்யில் கலப்படம் இருந்ததை அவர் ஊர்ஜிதப்படுத்தினார்.

8.50 லட்சம் கிலோ வீதம் 5 நிறுவனங்களுக்கு டெண்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு நிறுவனம் தேவஸ்தானத்திற்கு அனுப்பிய 68 ஆயிரம் கிலோ நெய்யில், 20 ஆயிரம் கிலோ நெய் கலப்படம் செய்யப்பட்ட நெய் என தெரியவந்ததால் அவற்றை திருப்பி அனுப்பி விட்டோம் எனவும், அந்த நிறுவனத்தை பிளாக் லிஸ்ட்டில் வைத்ததோடு, கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் சியாமளராவ் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து, திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு பிரசாதம் தயாரிக்க தற்போது கர்நாடக மாநிலத்தில் இருந்து நந்தினி நெய் வரவழைக்கப்பட்டு அதன் மூலம் தயாரிக்கப்படுகிறது

இது குறித்து முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறுகையில்,

"ஜெகன்மோகன் ஆட்சியில் லட்டு பிரசாதம் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்குகளின் கொழுப்பு கலந்த நெய் உபயோகிக்கப்பட்டுள்ளது. இது அபச்சாரம் அல்லவா?சுவாமியின் பணத்தை கொள்ளை அடித்தனர். சுவாமியின் பிரசாதத்திலும் கலப்படமா? பக்தர்கள் பல முறை இவர்களின் ஆட்சி காலத்தில் லட்டு பிரசாதத்தின் தரம்குறைந்து விட்டதாக புகார்கள் தெரிவித்தனர். ஆனால், அவற்றை இவர்கள் கண்டுக் கொள்ளவில்லை.

மேலும் அனைத்து பிரசாதத்திலும் கலப்படம் செய்தனர். தரம்குறைந்த பொருட்களையே உபயோகித்துள்ளனர். தற்போது தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நெய் கொள்முதல் மாற்றப்பட்டுள்ளது. இந்த தரம்மேலும் உயர்த்தப்படும். ஏழுமலையான் கோயில் நம்முடைய மாநிலத்தில் உள்ளது நம்முடைய அதிருஷ்டமாக பாவிக்கிறேன். அப்படி இருக்கையில், திருமலையின் புனிதத்தை நாம் தான் காப்பாற்றி கொள்ள வேண்டும். அது நமது கடமை." - என்றார்.

முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் இந்த குற்றச்சாட்டை தொடந்து, பல இந்து அமைப்புகள், ஏழுமலையான் பக்தர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், பா.ஜ.க, தெலுங்குதேசம், ஜனசேனா கட்சியினர் ஜெகனுக்கு எதிராகவும், அப்போதைய தேவஸ்தான நிர்வாகிகளுக்கு எதிராகவும் போர்க்கொடி தூக்கிஉள்ளனர். இது குறித்து விசாரணை நடத்தி, தவறு இழைத்தவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

திருப்பதி லட்டு பிரசாதத்தின் தரம் குறைந்ததால் ஏதாவது கலப்படம் இருந்திருக்கலாமோ என எண்ணி, ஜெகன் ஆட்சியில் வாங்கப்பட்ட அனைத்து பொருள்களையும், கடந்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி,என்.டி.டி.பி, சி.ஏ.எல் எஃப் லிமிடெட் எனும் டில்லியில் உள்ள பரிசோதனை மையத்திற்கு திருப்பதி தேவஸ்தானம் அனுப்பி வைத்தது. அந்த நிறுவனம் இவற்றை பரிசோதித்து விட்டு, கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி அறிக்கை அனுப்பி வைத்தது.

அதில் லட்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பசு நெய்யில் சோயா பீன், சூரிய காந்தி எண்ணெய், ஆலிவ், கோதுமை பீன், சோளம், பருத்தி கொட்டையுடன், மீன் எண்ணெய், பாமாயில், பன்றி கொழுப்பு மற்றும் எருமை கொழுப்பு ஆகியவை கலந்துள்ளதாக அறிக்கை வந்துள்ளது. இந்த ஆதாரத்தை வைத்து தான் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஜெகன் ஆட்சியில் நடந்த இந்த அநீதி குறித்து அம்பலமாக்கி உள்ளார்.

# த.வெ.க. கட்சியின் முதல் மாநாடு ஒக்டோபர் 27 இற்கு தள்ளிவைப்பு

## விஜய் அறிவிப்பு



விக்கிரவாண்டியில் ஒக்டோபர் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு நடைபெறும் என த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி அறிமுகப்படுத்திய நாள் முதல், நம் கழகத் தோழர்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தமிழ்நாட்டு மக்களின் பேரன்புடனும் பேராதரவுடனும் நமது அரசியல் வெற்றிக்கான களம் விரிவடைந்து கொண்டே வருகிறது. கழகக் கொடியேற்று விழாவின்போது, நமது முதல் மாநில மாநாட்டுத் தேதியை அறிவிப்பதாகக் கூறியிருந்தோம்.

நமது மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசியல் களத்தில் புதிய நம்பிக்கையை விதைக்கக்கூடிய நமது கழகத்தின் கொள்கைத் தலைவர்கள், கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல் திட்டங்களைப் பிரகடனப்படுத்தும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு, வருகின்ற ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி, மாலை 4 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம். விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் நடைபெற உள்ளது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது வெற்றிக் கொள்கை மாநாடு, நம்மை வழிநடத்தப் போகும் கொள்கைகளையும் நாம் அடையப் போகும் இலக்குகளையும் முழங்கும் அரசியல் திருவிழாவாகவும் பெருவிழாவாகவும் கொண்டாடப்படவுள்ளது. தமிழக மக்களின் மனங்களைத் தீர்க்கமாக வெல்லும் நோக்கில் அமையவுள்ள மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் ஏற்கெனவே நடந்துவரும் நிலையில், அதற்கான களப்பணிகளும் தொடங்கப்பட உள்ளன என்பதையும் உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன்.

இந்த மாநாட்டில் இருந்து வலிமையான அரசியல் பெரும்பாதையை அமைப்போம். இந்நிலையில், நமது முதல் மாநில மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடத்துவதற்காக. தமிழ்நாட்டு மண்ணைச் சேர்ந்த மகனாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் ஆதரவையும் ஆசிகளையும் உரிமையுடன் வேண்டுகிறேன். விரைவில் சந்திப்போம். வாகை சூடுவோம்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.




# லெபனான் மீது போரின் புதிய கட்டம் ஆரம்பம்

## இஸ்ரேல் அறிவிப்பு

லெபனான் நாட்டில் உள்ள ஹெஸ்பொல்லா அமைப்பின் இலக்குகள் மற்றும் உட்கட்டமைப் புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து எக்ஸ் பக்கத் தில் பதிவிட்டுள்ள இஸ்ரேலின் பாது காப்பு அமைச்சர் யோவா கேலண்ட் போரின்,

“புதிய கட்ட தொடக்கத்தில் நாங்கள் இருக்கிறோம். எங்களுடைய கவனம் வடக்கு பகுதியில் செலுத்தப் படும். அந்த பகுதியில் வளங்கள் மற்றும் படைகளையும் ஒதுக்கியுள் ளோம். எங்களுடைய திட்டம் தெளி வாக உள்ளது.

இஸ்ரேலின் வடக்கு பகுதி சமூ கத்தினரை அவர்களுடைய சொந்த வீட்டுக்குப் பாதுகாப்பாக திரும்ப செய்வதற்கான பணிகள் உறுதி



செய்யப்படும். இதற்குப் பாதுகாப்பு சூழ்நிலை நிச்சயம் மாற்றப்பட வேண்டும்.” - என்று குறிப்பிட்டுள் ளார்.





# இஸ்ரேலுக்கு நிச்சயமாகப் பதில் வழங்கப்படும்: ஹெஸ்பொல்லா அமைப்பின் தலைவர் தகவல்

வரலாறு காணாத அளவில் தமது அமைப்பு தாக்குதல் களை எதிர் கொண்டுள்ளதாக ஹெஸ்பொல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸரல்லா தெரிவித்துள்ளார்.

லெபனானில் பேஜர்கள் மற்றும் தொடர்பாடல் கருவிகள் வெடிப்புக்குள்ளானமையை தொடர்ந்து, அவர் அந்த நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னெச்சரிக்கை இல்லாத, இந்த தாக்குதலை தற்போது எதிர்கொண்டுள்ள நிலையில், அதற்கு நிச்சயமாகப் பதில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காசாவில், இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஹெஸ் பொல்லா அமைப்பு ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதர வாகச் செயற்பட்டு வருகின்றது.

ஹமாஸ் மற்றும் ஹெஸ்பொல்லா ஆகிய அமைப் புகளை ஈரான் ஆதரித்து வருகின்றது.

கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் லெபனானில் ஹெஸ்பொல்லா அமைப்பின் பல பேஜர்



மற்றும் தொடர்பாடல் கருவிகள் வெடித்தமையினால் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், 3,000க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இதன் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள போதிலும், அதற்கு இஸ்ரேல் இதுவரை எவ்வித பதிலையும் வழங்கவில்லை என வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 06

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 20/09/2024

## வேகமாக நேருகின்ற பருவ நிலை மாற்றம்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 20
பருவங்கள் அவசரமாக மாறிக் கொண்டே இருக்கின்றன, அதற்கான அறிகுறிகள் நம்மைச் சுற்றி சுழன்றுகொண்டிருக்கின்றன என்று செய்திகள் தெரி 02



# கனடா போக்குவரத்து அமைச்சினுடைய அமைச்சர், பிரதி அமைச்சராகத் தமிழர்கள்

## அனிதா ஆனந்த், அருண் தங்கராஜ் பொறுப்பில் அத்துறை

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 20**
**கனடிய வரலாற்றில் முதல் தடவை யாக ஓர் அமைச்சின் அமைச்சராகவும், பிரதி அமைச்சராகவும் தமிழர்கள் நிய மனம் பெற்றுள்ளனர்.**

**கனடாவின் போக்குவரத்து அமைச்சராக அனிதா ஆனந்த், பிரதி அமைச்சராக அருண் தங்கராஜ் ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.**

தமிழரான அனிதா ஆனந்த், கனடா வின் போக்குவரத்து அமைச்சராக நேற்றுப் பதவியேற்றார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சர வையில் இருந்து போக்குவரத்து அமைச்சர் பப்லோ ரொட்ரிகஸ் விலகிய நிலையில் இந்த மாற்றம் நிகழ்ந்தது.

ஏற்கனவே திறைசேரியின் தலை வராக இருந்த அனிதா ஆனந்திற்கு போக்குவரத்து அமைச்சு பதவி புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து துணை அமைச்சராக அருண் தங்கராஜ் கடந்த வருடம் பெப்ரவரியில் நியமிக்கப்பட்டவர்.

இவர் முன்னர் குடிவரவு, அகதிகள், குடியுரிமை இணை துணை அமைச் சராகஇருந்தார்.

# ட்ரூடோவின் அமைச்சரவையில் இருந்து பதவி விலகுகின்றார் பப்லோ ரொட்ரிகஸ்


ஒன்றாரியோ, செப்ரம்பர் 20
ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச் சரவையில் இருந்து பப்லோ ரொட்ரி கஸ் விலகவுள்ளார்.

நீண்ட கால அமைச்சராக இருந்த அவர், போக்குவரத்து அமைச்சர் பதவி யில் இருந்து விலக முடிவு செய் துள்ளார்.

அமைச்சரவையில் இருந்து வில கும் அவர் தொடர்ந்து சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட வுள்ளார்.

கியூபெக் லிபரல் கட்சியின் தலை மைப் பதவிக்கு அவர் போட்டியிட உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினரான அவர், அடுத்த தேர்தலில் தோல்வி அடைந் தார்.




2015 ஆம் ஆண்டு மீண்டும் நாடாளு மன்ற உறுப்பினரான ரொட்ரிகஸ், அரசாங்கத்தின் சபை தலைவராகவும், பாரம்பரிய அமைச்சராகவும் பதவி வகித்தவர்.




# இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நா தீர்மானம் வாக்கெடுப்பைப் புறக்கணித்தது கனடா

ஒன்றாரியோ, செப்ரம்பர் 20

காசா பகுதியிலும் ஆக்கிரமிக்கப் பட்ட மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தனது 'சட்டவிரோத பிரசன்னத்தை' ஒரு வருடத்திற்குள் நிறுத்த வேண்டும் என கோரும் ஐக்கிய நாடுகள் சபை யின் உயர்மட்ட வாக்கெடுப்பில் பங் கேற்காமல் கனடா தவிர்த்தது.

வாக்கெடுப்பு 124-14 என்ற கணக்கில் நிறைவேறியது.

கனடா உட்பட 43 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இந்த பிரேரணை ஒரு தலைப் பட்சமானது என ஐக்கிய நாடுகள் சபைக்கான கனடாவின் தூதர் பொப் ரே கூறியுள்ளார்.

ஆனாலும் இஸ்ரேல் சட்டவிரோத மாக பாலஸ்தீனப் பகுதிகளை ஆக்கி ரமித்துள்ளது என்பதை கனடிய அர சாங்கம் ஒப்புக்கொள்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன அரசு ஐ.நா. பொதுச் சபைக்கு இந்த பிரேரணையை கொண்டு வந்தது.

இந்த வாக்கெடுப்பு 'இராஜதந்திர பயங்கரவாதம்' என இஸ்ரேல் விமர்ச் சித்துள்ளது.

# தேசிய அமைப்பு ஒழுங்கில் இருந்து மெடிஸ் முதல்குடிகள் வெளியேற்றம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 20

ஒன்றாரியோ குழுவுடனான பிரச்சினைகளை மேற்கோள் காட்டி, மெடிஸ் தேசிய கவுன்சிலின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி, தேசிய அமைப் பிலிருந்து சஸ்காட்செவானின் மெடிஸ் முதல்குடிகள் குழு வெளியேறியுள்ளது.

நேற்று காலை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், தேசிய அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒன்றாரியோவின் மெடிஸ் முதல்குடியானது, மெடிஸ் அல்லாதவர்களை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்து கிறது என்று சஸ்காட்செவன் குழு கூறுகிறது.

இது மெடிஸ் உரிமைகள் மற்றும் சுயநிர்ணயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அடிப்படை பங்கிலிருந்து திசைதிருப்பப்படுகிறது என்று தீர்மானம் கூறுகிறது.

ஒன்றாரியோ குழுமத்தின் குடியுரிமைப் பதிவேட் டின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதில் மெடிஸ் தேசிய கவுன்சில் தவறிவிட்டதாகவும், தொடர்ந்து அழைப்பு விடுத்தும் பிரச்சினைகளை சரிசெய்ய வில்லை என்றும் அது கூறுகிறது.



## வேகமாக்...

விக்கின்றன.

தொலைதூர வடக்கு கனடாவில் உள்ள ஒரு சிறிய சமூகம் புதன்கிழமை நாட்டின் முதல் -10 டிகிரி செல்சியஸ் வானிலையை எட்டியது அனுபவபூர்வமாக எதிர்கொண்டது.

இந்த குளிர் தெற்கே நகர்கிறது.

இது சில முக்கிய நகரங்களுக்கு உங்கள் சுவாசத்தைப் பாதிக்கும் அளவுக்கு குளிர்ந்த காற்றைக் கொண்டு வரும்.

யுரேகா, நுனாவட், பருவத்தின் முதல் காலை வெப்பநிலை பூஜ்ஜியத்திற்குக் கீழே இரட்டை இலக்கங்களுக்குள் விழுந்த பெருமையைப் பெற்றது.




பெரும்பாலான கனடியர்களுக்கு அத்தகைய குளிர்ந்த காற்று வருவதற்கு சிறிது காலம் ஆகும்.

# ரஷ்ய சூழ்ச்சி தொடர்பில் விசாரணை நடத்த முடிவு



ஒன்றாரியோ, செப்ரம்பர் 20

ஒட்டாவா - பொது பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக் குழுவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமனதாக அமெரிக்கர்களிடையே பிளவை விதைப்பதற்காக வலதுசாரி செல்வாக்கு செலுத்துபவர்களை ஏமாற்றுவதற்கு ரஷ்ய சூழ்ச்சியின் மீது விசாரணை நடத்த ஏகமனதாக வாக்களித்தனர்.

இந்த மாத தொடக்கத்தில் தாக்கல் செய்யப்பட்ட அமெரிக்க குற்றப்பத்திரிகை, ரஷ்ய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடக நிறுவனமான சுவு இன் இரண்டு ஊழியர்களுக்கு எதிராக, 10 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டது,

இது, ரஷ்ய அரசாங்க செய்திகளுடன் உள்ளடக்கத்தை விநியோகிக்க சமூக ஊடக ஆளுமைகளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் பாம் டாமோஃப் அவர்களால் முன்வைக்கப்பட்டு வியாழனன்று நிறைவேற்றப்பட்ட இந்த பிரேரணையானது, சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் தவறான தகவல் நிபுணர்களை இந்த விடயத்தில் அழைக்க முற்படுகிறது.



# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ட்ரூடோ அரசு தப்பிப் பிழைக்கும்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 20

அரசாங்கத்தின் மீதான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என புதிய ஜனநாயகக் கட்சி நேற்று தெரிவித்தது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஏற்கனவே புளொக் கியூபெக்குவா கட்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புளொக் கியூபெக்குவா மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியினரின் திட்டமிட்ட வாக்குகள், திடீர்த் தேர்தலுக்கான வாய்ப்பை நீக்கி, லிபரல் அரசாங்கத்தின் நீடித்த ஆட்சிக்கு வழியமைக்கின்றது.

இந்த வார தொடக்கத்தில் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங்கிற்கு, கன்சர்வேடிவ் கட்சிகளுடன் சேர்ந்து ஒரு பிரேரணையில் வாக்களிக்குமாறு பொய்லியேவ் சவால் விடுத்திருந்தார்.

இந்ப் பிரேரணை செப்டம்பர் 24 அன்று விவாதிக்கப்பட்டு மறுநாள் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

கன்சர்வேடிவ் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பது என்பது லிபரல்களை புதிய ஜனநாயகக் கட்சி ஆதரிக்கிறது என்று அர்த்தமல்ல என சில வாரங்களுக்கு முன்பு பிரதமர் ஜஸ்டின் ட்ஷரூடோவுடனான தனது அரசியல் உடன்படிக்கையிலிருந்து வெளியேறிய சிங் கூறினார்.




# கனடாவில் பெருந்தொகை வென்ற அதிர்ஷ்டசாலிகள்!

கனடாவின் ஒன்றாரியோ மற்றும் கியூபெக் ஆகிய மாகாணங்களை சேர்ந்த இரண்டு பேர் லொத்தர் சீட்டு இலுப்பில் பெருந்தொகை பணத்தை வென்றுள்ளனர்.

லோட்டோ மேக்ஸ் ஜாக்பாட் லொத்தர் சீட்டு இழுப்பில் முதல் பரிசை இந்த இருவரும் வென்றுள்ளனர்.

முதல் பரிசாக 80 மில்லியன் டாலர்கள் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருவரும் இந்த வெற்றி பரிசு பணத் தொகையை பகிர்ந்து கொள்கின்றனர்.

இதன்படி ஒருவர் தலா 40 மில்லியன் டாலர்களை பரிசாக வென்றெடுப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# சட்டவிரோத ஆள்கடத்தல்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது!

கனடாவில் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஐந்து பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் இந்த நபர்கள் சட்டவிரோத ஆள்கள் கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மோசடி, வன்முறைகள், உளவியல் ரீதியான அழுத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் குற்றச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து பெருந்தொகை பணம் மற்றும் ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் 25 வயது முதல் 35 வயது வரையிலானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிஸஸாகா, பிராம்ப்டன், ஷெல்பர்ன், கோர்டைஸ் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். திட்டமிட்ட அடிப்படையில் நீண்ட காலமாக இந்த சட்டவிரோத ஆள்கடத்தல் கும்பல் செயல்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.




# கனடா விசாவுக்கு விண்ணப்பித்தல் அடிப்படையான முக்கிய தகவல்கள்

பெரும்பாலும் கல்வி தொடர்பில் கனடாவுக்கு பயணப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றாலும், வேலை வாய்ப்பு மற்றும் குடியிருக்கவும் பலர் கனடாவை நாடுகின்றனர். அந்தவகையில் கனடாவுக்கான விசா தொடர்பில் கூடுதல் தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.

### கனடா விசா வகைகள்:

விண்ணப்பதாரரின் தேவைகளின் அடிப்படையில் கனடா நான்கு வகையான விசாக்களை வழங்குகிறது.

1. தற்காலிக குடியுரிமை விசா
2. படிப்பு அனுமதிகள்
3. வேலை அனுமதிகள்
4. நிரந்தரக் குடியிருப்பாளர் பயண ஆவணம்

இதில் வருகையின் தன்மை மற்றும் தங்கியிருக்க உத்தேசித்துள்ள காலத்தைப் பொறுத்து, எந்த வகையான விசா விண்ணப்பிக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

### 1. வருகையாளர் விசா

கனடாவுக்குச் செல்ல விரும்பும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு கனடா விசிட்டர் விசா எனப்படும் தற்காலிக குடியுரிமை அனுமதி வழங்கப்படுகிறது. இந்த விசா ஆறு மாதங்களுக்கு மிகாமல் வழங்கப்படும்.

நீங்கள் சுற்றுலாவுக்காக கனடா செல்ல விரும்பினால், உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களைச் சந்திக்க விரும்பினால், ஏதேனும் உத்தியோகபூர்வ வேலைகளைச் செய்ய விரும்பினால், நீங்கள் கனடா வருகையாளர் விசா அல்லது குறுகிய கால விசாவிற்கு விண்ணப்பிக்கலாம்.

கனடா வருகையாளர் விசாவிற்கான கட்டணம் 100 டொலர்களில் இருந்து தொடங்குகிறது. கனடா வருகையாளர் விசா பொதுவாக 47 நாட்களுக்குள் அனுமதிக்கப்படும்.

### 2. சுற்றுலா விசா

சுற்றுலா நோக்கங்களுக்காக கனடாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு, கனடா சுற்றுலா விசா வழங்கப்படுகிறது. கனடாவிற்குள் நுழைந்த திகதியிலிருந்து 6 மாதங்கள் அதிகபட்சம் இது செல்லுபடியாகும்.

வெளிநாட்டவர்கள் கனடா சுற்றுலா விசாவிற்கு ஒன்லைனில் அல்லது கனடாவின் தூதரகம் அல்லது அந்தந்த நாடுகளின் தூதரகங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம். கனடா சுற்றுலா விசாவிற்கான கட்டணம் 100 டொலர்கள்.

### 3. வேலை அனுமதி

உங்கள் வருகையின் நோக்கம் வட அமெரிக்க நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணிபுரிவதாக இருந்தால், கனடா வேலை விசா அல்லது பணி அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

அத்தகைய விசா விண்ணப்பம் அந்த நிறுவன உரிமையாளரால் வழங்கப்படுகிறது. இந்த விசாவின் காலம் கனடாவில் உள்ள நிறுவனத்துடனான வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தைப் பொறுத்தது. இந்த விசாவிற்கான விண்ணப்பக் கட்டணம் 155 டொலர்களில் தொடங்குகிறது.

### படிப்பு அனுமதி

கனடாவில் உள்ள நியமிக்கப்பட்ட கற்றல் நிறுவனங்களில் தங்கள் படிப்பைத் தொடர விரும்பும் விண்ணப்பதாரர்கள் கனடா படிப்பு அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இந்த அனுமதியானது கல்வித் திட்டத்தின் காலம் மற்றும் பாடத்திட்டத்தை முடித்த 90 நாள்கள் வரை செல்லுபடியாகும். இந்த அனுமதிக்கான கட்டணம் 150 டொலர்களில் இருந்து தொடங்குகிறது.

### போக்குவரத்து விசா

கனடா வழியாக மற்றொரு சர்வதேச இடத்திற்குச் செல்லும் பார்வையாளர்கள் கனடா போக்குவரத்து விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். 48 மணி நேரத்திற்கு மிகாமல் செல்லுபடியாகும். உங்கள் பயணத் திட்டங்களைப் பொறுத்து ஒன்று முதல் இரண்டு உள்ளீடுகளுக்கு செல்லுபடியாகும். கனடா போக்குவரத்து விசாவிற்கு கட்டணம் தேவையில்லை.

### நிரந்தரக் குடியுரிமை விசா

நிரந்தர அடிப்படையில் கனடாவில் குடியேற விரும்பும் வெளிநாட்டினர் கனடா நிரந்தர வதிவிட விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும். கனேடிய குடிமகனாக இல்லாத நிரந்தர வதிவிட அந்தஸ்து கொண்ட ஒருவரால் அனுகக்கூடிய சலுகைகள் பின்வருமாறு:-

தொடர்ச்சி▼



# கனடா விசாவுக்கு விண்ணப்பித்தல் அடிப்படையான முக்கிய தகவல்கள்

தொடர்ச்சி▲

✦ கனடாவின் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் திறன்.

✦ கனேடிய சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்படுவதற்கான உரிமை.

✦ கனடாவின் எந்தப் பகுதியிலும் வாழவும் படிக்கவும் அனுமதி.

✦ சுகாதார சேவைகள் போன்ற சமூக நலன்களுக்கான ஒப்புதல்.

## கனடா வருகையாளர் விசாவிற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?

கனடா வருகையாளர் விசாவிற்கு விண்ணப்பிக்க சில முக்கியமான கட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. தகுதிகளை சரிபார்த்து கொள்ளவும்

செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, குற்றவியல் பின்னணி கொண்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும். கனடாவில் உள்ள உங்கள் தங்குமிடம், பயணம் மற்றும் தேவை கள்.

2. ஒன்லைனில் விண்ணப்பத்தைத் தயார் செய்யவும்.

கனடா அரசின் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் பயண விசா விண்ணப்பத்திற்கான படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை ஒன்லைனில் அல்லது அஞ்சல் வழியாக சமர்ப்பிக்கலாம், ஒன்லைன் வழி விரைவானது.

## படிவங்கள்

IMM 5257 - விண்ணப்ப படிவம் அத்துடன் உங்கள் கடவுச்சீட்டு விவரங்கள், புகைப்படங்கள், பயண திட்டம், வங்கி நிலுவைத் தரவுகள் போன்ற ஆதாரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

## கட்டணம்:

வெவ்வேறு விண்ணப்பத்திற்கேற்ற விதத்தில் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கனடா விசா விண்ணப்ப கட்டணம் பொதுவாக CAD 100 (கனடியன் டொலர்) ஆகும்.

## பையோமெட்ரிக்ஸ்:

கனடா விசா அலுவலகத்தில் பையோமெட்ரிக்ஸ் (கைரேகை, புகைப்படம்) சமர்ப்பிக்க வேண்டும். பையோமெட்ரிக்ஸ் கட்டணமும் கூடுதலாக இருக்கும்.

## 5. நேர்காணல் அல்லது கூடுதல் ஆவணங்கள்:

சில சந்தர்ப்பங்களில், உங்களை நேர்காணலுக்கு அழைக்கலாம் அல்லது கூடுதல் ஆவணங்களை சமர்ப்பிக்க கேட்கலாம். மேலும் விவரங்களுக்கு, கனடா அரசின் அதிகாரப்பூர்வ IRCC இணையதளத்தைப் பார் வையிடலாம்.

## விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

1. சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
3. புகைப்பட அடையாளச் சான்று
4. குடும்பத்தின் விவரங்கள் (IMM 5645)
5. உங்கள் சார்பாக குடும்ப உறுப்பினர் அல்லது மூன்றாம் தரப்பினரால் விசா விண்ணப்பம் சமர் ப்பிக் கப்பட்டால், ஒரு பிரதிநிதியைப் பயன்படுத்தவும் (IMM 5476)

